பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 07 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிப்பதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

2. தேசிய திரைப்பட விருதுகள் உலக அரங்கில் இந்திய திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டனில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து விவாதிப்பதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற இரு அவைகளும் சுமூகமாக நடைபெறுவதற்கு, அனைத்து எதிர் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிப்பது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் திங்கட்கிழமை தொடங்கி, அடுத்த மாதம் 13-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் போது, பல்வேறு முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

<<<<>>>>

2024-ம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

திரைத்துறையைச் சேர்ந்த கலைஞர்களை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை சார்பில், இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆர்டிகள் 370 என்ற ஹிந்தி மொழித் திரைப்படத்திற்கு, சிறந்த திரைப்படத்திற்கான விருது வழங்கப்படுகிறது.

சிறந்த இயக்குநருக்கான விருதுக்கு, அமரன் தமிழ் படத்தை இயக்கிய ராஜ்குமார் பெரியசாமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சிறந்த இசையமைப்பாளருக்கான விருது இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் குமாருக்கு வழங்கப்படுகிறது.

சிறந்த தமிழ் திரைப்படத்திற்காக ராயன் படமும், சிறப்புப் பிரிவில் கேப்டன் மில்லர் திரைப்படமும் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

திரைப்படத் துறையில் பல்வேறு பிரிவுகளில் சிறந்த படைப்புகளுக்காக தேசிய விருதுகளைப் பெற்றுள்ள அனைத்து கலைஞர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த விருதுகள் உலக அரங்கில் இந்திய திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

திரைப்படத் துறையில் பல்வேறு உயரிய சாதனைகளைப் படைத்து, கலைஞர்கள் நாட்டிற்கும், திரைப்படத் துறைக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜமுனாமாத்தூரில் இரண்டு நாள் கோடை விழா மற்றும் மலர்க் கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

பெண்கள், இளைஞர்கள், பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மலைப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்குவதுடன், மருத்துவம், கல்வி, போன்ற அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தி தரப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

எவ்வித சாதிப் பாகுபாடுமின்றி அனைத்துப் பிரிவு மக்களும் பயனடையும் வகையில் தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பேருந்து வசதி இல்லாத பல்வேறு தொலைதூர கிராமப் பகுதிகளுக்கும் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அதிகாரிகள் அலட்சியமாக செயல்படாமல் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மூலம் நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தகுதியுடைய பழங்குடியின மக்கள் மானியத்துடன் வங்கி கடன் பெற்று நிலம் வாங்குவதற்கு இத்திட்டம் வழிவகுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Selvaraj – 36 Sec)

**<<<<>>>>**

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் தொழில்நுட்ப மாநாடு நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கல்லூரி மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப ஆர்வலர்கள் இணைந்து ஒரே நாளில் ஆயிரம் AI ஏஜெண்ட்களை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Sivakumar – 31 Sec)

**<<<<>>>>**

தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வடக்கு கடலோர பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் ஒருசில பகுதிகளில் இன்று முதல் 4 தினங்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகரில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ஜோர்டானில் உள்ள அமெரிக்க பாதுகாப்புத் தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் இரண்டு வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

பாகிஸ்தான் காவல்துறை மேற்கொண்ட சோதனை நடவடிக்கைளின் போது, உரிய ஆவணங்களின்றி இருந்த ஆப்கான் நாட்டைச் சேர்ந்த 93 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

வேளாண் துறையில் செயற்கை நுண்ணறிவு, நவீன தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டை விரைவுபடுத்தும் வகையில் மாநில அளவிலான வேளாண் ஹேக்கத்தான் திட்டத்தை செயல்படுத்த மஹாராஷ்டிரா மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில், வனத்துறை, பாதுகாப்புப்படையினர், சமூக அமைப்புகள், மாணவர்கள், அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து கடந்த இரு வாரங்களில் 15 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளனர்.

<<<<>>>>

நாடு முழுவதிலும் வருவாய்ப் புலனாய்வு இயக்குனராக அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது, 2 கோடி ரூபாய் ரொக்கம், 22 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

நாட்டில் உள்ள 12 வடகிழக்கு மாநிலங்களில், முதலீடுகளுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியலில், 6-வது இடத்தை நாகாலாந்து மாநிலம் பெற்றுள்ளது.

<<<<>>>>

நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள நெல் மூட்டைகளை அரவை ஆலைகளுக்கும், சேமிப்புக் கிடங்குகளுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், இந்தியன் வாங்கி சுய வேலைவாய்ப்பு நிறுவனம் நடத்தி வரும் தொழில்முனைவோர் பயிற்சியை ஆட்சியர் திருமதி நஃப்ரியா நேற்று ஆய்வு செய்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், ஆடிக்கிருத்திகை விழாவை முன்னிட்டு அடுத்தமாதம் 6-ம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி கவிதா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி தொடங்கியுள்ள முதல் நாளில் சுயகணக்கெடுப்பு மூலம் 16 ஆயிரத்து 922 குடும்பத்தினர் தரவுகளை பதிவேற்றம் செய்துள்ளதாக சென்னை மாநகராட்சியின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

லண்டனில் இப்போட்டி பிற்பகல் 3.30 மணிக்குத் தொடங்குகிறது.

<<<<>>>>

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் பி.வி. சிந்து, ஜப்பானின் Akane Yamaguchi-ஐ எதிர்கொள்கிறார்.

டோக்கியோவில், இப்போட்டி இன்று காலை 8.15 மணிக்குத் தொடங்குகிறது.

<<<<>>>>

ஹங்கேரியில் நடைபெற்று வரும் புடாபெஸ்ட் மல்யுத்தப் போட்டியின், மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Antim Panghal வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

மியாமி நகரில் இன்று அதிகாலை நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இங்கிலாந்து 6-4 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வென்றது.

<<<<The End>>>>